ஸ்ரீ

ஸ்ரீ வெங்கடேசாய நம.

ஸ்ரீ திருப்பதி

ஸ்தல யாத்திரை அலங்கார

# வழி நடைப் பாட்டு.



இஃது

திருப்பதி புஸ்தக வியாபாரம்

எம். வி. ருத்திரைய்ய நாயுடு அவர்கள்

விருப்பத்தின்படி

பாலகவி. C. M. K. சாஸ்திரியாரால்

இயற்றியதை,

சென்னை, மண்ணடி

சரவணபவ அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1929.

இதன் விலை] *All Rights Reserved.* [அணா 2.

ஸ்ரீ ராமஜெயம்.



## திருவேங்கடன் துதி.

சோதியாய்த்தோன்றுமுருவமேயருவா மொருவனேசொல்லுதற்கரிய
வாதியேநடுவேயந்தமேபந்த மறுக்குமானந்தமாகடலே
நீதிலாநன்மைத்திருவருட்குன்றே திவ்யதிருவேங்கடத்தானே
யாதுநீசெய்வையோயேதும்நானறிலேன் யானந்தமானபொருளே.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ வெங்கடேஸ்வராய நம:

# திருப்பதி யாத்திரை

# அலங்கார பாட்டு.

## விநாயகர் துதி.

வெண்பா.

திருப்பதியாத்திரையின் திவ்யாலங்காரமதை
விருப்பமுடன் பதங்களாய் விளம்பிடவே—இருவினையை
தொலைத்துந்தன் தூயபதம் துரிதமுடனெந்தனுக்கு
நிலைத்திடவே செய்வாய் நீ.

(தந்தான தானன தானன-என்ற மெட்டு.)

(வேறு-கண்ணிகள்.)

தந்திமாமுகவனை யனுதினம்
மந்திரத்தால் பணிந்திடமனம்
நிலைத்திடுமே வினை
தொலைத்திடுமே

தஞ்சம் யெனவரு மடியவர்
வஞ்சம் தொலைத்திட அருள்புரி
கொஞ்சம் தயவுட நடமிடும்
தா தகிட தகதிமி
ததிங்கிணதோம்
தகிங்கிணதோம்
ததிங்கிணதோம் (தந்)

மந்தாரை மாமலரொடு
பணிந்தாலே மகிழ்வுடன் அருள்புரி
மதகஜமே வரும்
மிதுநிஜமே

கண்டு குறைகளை
விண்டு களிப்புமே
கொண்டு கணபதி
தொண்டு புரிந்திட

தா தகிட தக ஜணுத தா
ததிங்கிணதோம்
ததிங்கிணதோம்
ததிங்கிணதோம் (தந்)

## புருடன்-மனைவியை திருப்பதி யாத்திரைக்கு கூப்பிடுதல்.

(வனஜாக்ஷி - என்ற மெட்டு)

பல்லவி.

வருவாயே வேங்கட மதைகாண (வரு)

அனுபல்லவி.

வருவாய் வினையகற்றி வருவோமிப்போதே (வரு)

சரணங்கள்.

வெங்கடேசனென்று ஒருதரம்சொன்னால்
வெம்வினையாவுமே துலைத்திடும்பின்னால்
வைகுண்டபதவியும் வாய்ந்திடும்தன்னால்
அந்தமுள்ள சுந்தராங்கி
சொந்தமுட னிந்தவேளை (வரு)

வருவார் வினையகற்றும் வைகுந்தநாதன்
வேணு கானலோல வேதாந்த போதன்
வெண்டமிழ் மாலைக ளணிந்திட்ட வேதன்
விப்ர நாதன் விமலபாதன்
விநோதபோதன் வேணுநாதன். (வரு)

## இருவருமாக ரயிலுக்குவந்து டிகட்வாங்கி வண்டியில் அமர்ந்து வண்டி புரப்பட்டு வரும்சமயம் விநோதங்களை மனைவிக்குறைத்தல்.

தெம்மாங்கு மெட்டு.

பல்லவி.

பாரடிமானே பெரிய சென்ட்றல் ஸ்டேஷன்
சீரடி தேனே,

சரண கண்ணிகள்.

கூர இதன்பெருமை குதூகலமாகுது
கும்பல் கும்பலாக கூட்டமும்வருகுது
கோடிகணக்கான கொடிகளும் பரக்குது
கோவிந்தா என்றமேதார் கோஷ்டமும் வலுக்குது (பார)

பாரோர் புகழ்ந்திடும் பேஜின்பிரிட்ஜ்ஜாமிது
பகரும் வியாசர்பாடி மைதானம் காணுது
போகுது பெரம்பூரு ஸ்டேஷனுக்கேயிது
பலபேர்கள் வேலைசெய்யும் பெரம்பூர் வொர்க்ஷாப்பிது
காணடி மானே காணுதஜென்மமும்
வீணடி தேனே

வாதபி வில்வலன் வதையுண்ட விடமிது
வாதவூரடிகளும் வாழ்த்தும் ஸ்தளமிது
வில்லிவாக்கமென்று நாளும்வழங்குது
வகஸ்த்தீஸன் வாழ்கோயில் வடிவமுங்காணுது
பாடியும் பாராய் பக்தர்கள்கூடியே
ஆடுவார் சீராய்

குப்புகுப்பு என்று கொரட்டூரும்தாண்டுது
அப்பு ப்ருதிவிதேயு வாயுவும் மாண்டுது
ஒப்புயர்வில்லாத வாகாசம் கொண்டது
எப்புவியிலும் புக ழும்பத்தூர் தாண்டுது
என்னென்று சொல்வேன்—உற்றவளமதை
இன்னமுஞ் சொல்வேன்

ஆள்களை சேர்த்திடு மாவடியாமிது
ஆனந்த முடனுடு மாடுகள்மேயிது
ஆனந்த பட்டாபி ராம் தின்னனூரிது
அடுத்த செவ்வாபேட்டை அன்னங்கள்மேயிது
திருவள்ளூர் வந்தோம் வீரராகவர்வாழும்
திருவள்ளூர் வந்தோம்

அமாவாசைதோறுமே யானந்தகூட்டமாம்
உமாபதி வாழ்ந்திடும் கோட்டமெதேட்டமாம்
சமாராதனைகளில் சந்தோஷ ஆட்டமாம்
சாமான்கள் வைத்தோர்க்கு ஜடுதியில் வாட்டமாம்

போலீசார் சந்து பொந்திலொளிந்து
பேசார்கள் வந்து

கடம்பத்தூர் மணவூர் திருவாலங்காடாகும்
மடமை யொழித்திட்ட மோசூரரக்கோணம்
படைக்கதிபதியும் வாழும் திருத்தணி
பிரபல நகரியும் புத்தூர் ரேணிகுண்டா

பார்த்துமே வந்தோம் பக்தர்களுடனே
சேர்ந்துமே வந்தோம் (பாரடி)

## ரேணிகுண்டாவிலிருந்து பக்தகோடிகளுடன் திருப்பதி ஸ்தள மகிமையை பேசிக்கொண்டு வருதல்.

(ஆண்டிபண்டாரம் மெட்டு)

பல்லவி.

என்னசொல்லுவேன் யானும்
ஏது சொல்லுவேன் மகிமை (என்)

சரணம்.

1. இன்னம் மஹரிஷிகள் இருந்தே தவம்புரியும்
உன்னத திருமலையின் உண்மை சரிதமதை (என்)
2. காசிபிரயாகை கயாகண்காணாத தேசத்தாரும்
ஆசையுடனேபாடி யாடிகூடி வருவதையான் (என்)
3. தாச தாசர்கள்கூடி தேசமெல்லாம் திரிந்து
ஆசா பாச மறுத்துன் நேச மதைநினைந்து (என்)
4. பாலாஜி யென்று சொல்லும் பிரபல பைராகிகளும்
மேலாம் பதவிகோரி மேலு மேலும் வருகுவதை (என்)
5. கணக்கில்லா மானிடர்கள் கண்டு திருமலையின்மீது
கணப்பொழுதி லேரியவர் களிகூர்ந்து நிற்பதையான் (என்)
6. பாலர் பெரியோர்களும் பழுத்த கிழவர்களும்
ஆவலாய் கோவிந்தாவென்று ஆர்பரித்து நிற்பதையான் (என்)
7. மலையடிவாரமுதல் மாதவனை தான்நினைந்து
தலைமீதில் மூட்டைகளை தாங்கியே செல்வதையான் (என்)
8. கால்கள் நோகாதபடி கர்த்தனை தான்நினைந்து
காலி கோபுரம்தாண்டி கோவிந்தா வெனகொண்டாட (என்)

9. ராசி ராசியாகவே பாசியுடன் தனத்தை
நேசமுடன் கொணர்ந்தே வீசிநடப்பதையான் (என்)

10. எத்தனை தூரமோயுந்தன் சன்னதி யென்றுஎண்ணி
சித்தமுருகிடவே சிந்தனையும் செய்திடுவார் (என்)

11. முழங்கால் முரித்தானிடம் முரஹரி மாதவாயென்று
முழுமன துடன் துதித்து முன்னுக்கே செல்லுவதை (என்)

12. முனிவர்க்கு திருப்பதி முத்திபளிக்கும்பதி
கனிஉள்ள மானிடற்கு காணும்வைகுண்டபதி (என்)

13. சித்தர்வாழ் திருப்பதி சின்மையானந்தரதி
நித்தமும் பெருகும்நிதி நித்யானந்தமேகதி (என்)

14. மூவுலகங்களுக்கும் முக்கியமாம் திருப்பதி
கூவுங்கோகிலங்களுக்கும் குதூகளிக்கும்பதி (என்)

15. திருப்பதியே கலிபதனை தீர்க்கும் பெரும்பதியாம்
விருப்பமுடன் வேண்டியாண்டி வந்திடுவார் கோடாகோடி ()

16. மூணரை கோடிதீர்த்தங்கள் முக்கியமாய் இருக்குதுகாண்
வேணவரமளிக்க வெங்கடேச னிருக்கின்றான்காண் (என்)

17. சாமி புஷ்கரணியில் சங்கல்பங்களும்செய்து
சாம்பிரதாயத்துடனே ஸ்னானபானங்கள் செய்வார் (என்)

18. பஞ்சபாதகமதை பஞ்சாக பரக்கசெய்யும்
பாபவினாச தீர்த்தம் பக்குவமாய் கண்டிடுவீர் (என்)

19. மூண்ட வினையருக்கும் முத்தியும் தானளிக்கும்
பாண்டவ தீர்த்தமதில் பக்குவமாய் ஸ்னானம் செய்வீர் (என்)

20. கோரின வரமளிக்கும் கோகர்ப்ப தீர்த்தமதில்
நேர்மையுடன் ஸ்னானம்செய் நாடிடுமே புண்யமது (என்)

21. ஆகாச கங்கையிலே ஆசையுடன் தான்முழுக
ஆசாபாச மொழிந்து ஆனந்த நிலைபெருகும் (என்)

22. ஜாபாலி தீர்த்தமதில் ஜபஹோம கர்ம்மம்செய்ய
ஜெய மங்களமுடன் ஜெயமே பெருகிவாழ்வார் (என்)

23. தும்புரு தீர்த்தமொடு அமரதீர்த்த மாடிட
துன்பவினை தொலைந்து தூயஞான மளித்திடுமே. (என்)

24. வைகுண்ட தீர்த்தமதில் வைராக்கியமுடனுட
வையகத்தி லுள்ளபேர்க்கு வாய்ந்திடுமே சாயுஜ்யபதம் (என்)

25. ஹரிசக்கிர தீர்த்தமதில் அன்புடன் நீராடிட்டவே
பரமாத்ம தெரிசனம் பக்ஷமுடன் கிட்டிடுமே (என்)

26. ராமகிருணஷ்ண தீர்த்தமதில் ராகத்துவேஷ மருத்து
நேமமுடன் குளிக்க நித்திய மங்களமாகும் (என்)

27. நாகேந்திர சயனன்தனை நாடி துதித்துக்கொண்டு
நாகசங்க தீர்த்தமாட நாளும்ஜெய முண்டாகும் (என்)

28. குமாற தீர்த்தமதில் கோரி ஸ்னானங்கள்செய்ய
அமரர்கதிபதியும் ஆறுமுகன் காத்திடுவான் (என்)

29. இந்திர தீர்த்தமதில் இன்பமுடன் ஸ்னானம்செய்ய
இந்த புவியின்மீதில் இருவினைக ளற்றுவாழ்வார் (என்)

30. தீராவினை யருக்கும் தேவனருள் சுரக்கும்
விரஜா தீர்த்தமதில் வகையுடனே ஸ்னானம்செய்ய (என்)

31. கடாஹ தீர்த்தமதில் கடனியற்றி ஸ்னானம்செய்ய
நாடாது யெமபயமும் நாரணன் தன்னருளால் (என்)

32. அதிசய மிகுந்திடும் அஸ்த்தி தீர்த்தமதிலே
அற்புதமாய் முழுகிவர அதிசயம் பலவும்காணும் (என்)

33. வேண்டி யடியார்க்கு வண்ணமுது தானளித்து
வராக தீர்த்தமாட வந்திடுவார் வேணுநாதன் (என்)

34. கபில தீர்த்தகரையில் கர்மாக்கனை செய்திட்டால்
ஒப்பில்லாத பதவிகளும் உங்கள்பெரியோர்க்கு வரும் (என்)

35. வருண வாயு குபேரன் வஸிஸ்ட தீர்த்தமுடன்
கருணை புரியுமெம காலவாக்னி தீர்த்தம்பாரீர் (என்)

36. மார்கண்ட சரஸ்வதி மகாதொட்டி தீர்த்தமாட
மறுஜென்ம மில்லையென்று மாமுனிகள் கூறினார்கள் (என்)

37. இத்தனை தீர்த்தமதில் இன்பமுடன் தான்முழ்கி
அத்தனை நினைத்துநாடி யாடிபாடி யோடிவாரீர் (என்)

38. பக்தருக்கு சேஷகிரி பொன்மயமாய் காணும்
அசத்யருக்கு சேஷகிரி அந்தகார மாயைகாணும் (என்)

39. அந்தாத் தோரும்காண அரிதான பரந்தாமன்வாழும்
மந்திர கிரியின்மகிமை மானிடரால் சொல்லபோமோ (என்)

40. ஆதியில் பத்மாவதியை அரியமணம் புரிந்தகடன்
தீதிலாமல் தீர்த்திடவே தாட்டிகமாய் கேட்டுவாரார் (என்)

41. கண்டு தெரிசித்திடும் கனத்தபக்தரிடம்
விண்டுவும் வரிபோட்டு வாங்குகின்றார் வட்டிப்பணம் (என்)

42. அண்ட மளாவிநிற்கும் மண்டபம் மதில்களேயும்
கண்டு கோபுரவாயில் தண்டம் சமர்ப்பிக்கின்றார் (என்)

43. ஆனந்தமுடன் கூடி ஹரி ஹரியென கூத்தாடி
மோன முத்திரைகூட்டி மூக்குநுணி குரியைகாட்டி (என்)

44. மஞ்சத் துணியுங்கட்டி மங்கையரை தானுங்கூட்டி
நெஞ்சதில் நாமஞ்சூஞ்டி நிலைத்திருப்பாரே காட்டில் (என்)

45. காலையிலே விஸ்வரூபம் கண்டு தெரிசித்திட்டால்
எமன்-ஓலையதும் விலகிடுமே உண்மையிது கண்டிடுவீர் (என்)

46. தூயமனத்துடனே தோமாலை சேவையதை
நேயமுடனே காண நாடிவரும் நல்சுகமும் (என்)

47. கண்டாமணி யோசையோடு கண்டிடுவீர் வீரசேவை
அண்டின பேர்களுக்கு அணுவளவும் துன்பமிரு (என்)

48. புஷ்பாங்கி தெரிசனத்தை பண்புடன் தெரிசித்தோர்க்கு
குஷ்ட ரோகமுதலாய் குன்மங்களும் தீர்ந்திடுமே (என்)

49. இவ்வித தரிசனங்கள் அவ்வித பலன்கொடுக்கும்
தப்பித மிருந்தபோதும் ஒப்பி கணபதிக்கருள்வீர். (என்)

---

## கும்மி.

கும்மியடி பெண்காள் கும்மியடியுங்கள்
கொண்டைகுலுங்கவே கும்மியடி
நம்மையாளும் நாதன்பாதத்தை
நாடிகும்மியடியுங்கடி—பதம்பாடி கும்மியடியுங்கடி 1

ஆனைமுகவ னருமுகன்வர்ணிபை
ஆனந்தமுடனே நாடுங்கடி
ஆனைக்கபயம் தந்திட்டஹரியை
அன்புடன்போற்றியே கும்மியடி 2

கொண்டல்மணிவண்ணன் கோபாலகண்ணன்
கோரும்வரந்தரும் குழந்தையடி
அண்டத்துயிர்கட்கு ஆதாரபூதனும்
அரியஜெயரகு ராமனடி 3

ராமனடி ஜெயராமனடி
வீரராமனடி நல்லசோமனடி
ராமநாமத்தைசூடியாடிபாடி கும்மியடியுங்கடி
பாதம்தேடி கும்மியடியுங்கடி 4

தாயும்தந்தைகுரு தெய்வமும்நீயென்று
வாய்த்திரங்தொரு வார்த்தைசொன்னால்
தாயினுமினிய தாயாயிருந்து
தரிசனம்தருவார் பாருங்கடி 5

வளமிகுந்திடும் வேங்கடமீதினில்
வல்மிகத்திருந்து வந்தவனும்
குளங்களேரிகளெங்கு பார்த்தாலுமே
கோக்களுடன்வந்தான் பாருங்கடி 6

பாருங்கடிபசு கூட்டங்கள்சென்றுமே
புற்றின்மேல்பாலை கறந்திடவே
பார்த்தகாவலனும் பக்ஷமுடன்சென்று
புகன்றானாகாச ராஜனிடம் 7

ராஜனும்கேட்டிதை கோபமடைந்துமே
ராக்ஷதனைப்போல தான்சீறி
ராஜாங்ககத்தியை கையிலெடுத்திரு
கூராகசெய்குவேன் பாருமென்றான் 8

பாருங்கள்பசுவின் பாலை திருடியுண்ட
பாதகனையிப்போ வெட்டிடுவேன்
கூறுங்கள்உற்றதை குணமுடன்நீரும்
குறியும்குணமுங் கண்டவாரே 9

கூறும்மொழியதை கேட்டகோபாலர்கள்
கூற்றமில்லாமலே சுற்றமுடன்
வாருமென்றுசொல்லி வேங்கடமீதினில்
வகையுடனழைத்து காட்டிவிட்டார் 10

காட்டினதைக்கண்டு கடுங்கோபங்கொண்டு
காராம்பசுவை வெட்டவென்று
நீட்டினகத்தியை தான்காத்தெடுத்து
திட்டமாய்வெட்டென விட்டுவிட்டான் 11

விட்டவுடன்கத்தி வல்மிகத்தில்பட
விண்டுவும்வெளியே வந்துநிற்க
திட்டெனவெட்டின மரம்போல்ராஜனும்
சட்டெனபூமியில் சாய்ந்துவிட்டான் 12

பூமியில்வீழ்ந்திட பூபாலன் தன்னை
புண்ணியமூர்த்தியும் தானெழுப்பி
காமியருடன்கூடி கலங்காமலென்
காக்ஷியைகண்டிடு என்றுரைத்தார் 13

ஆக்ஷிபுரிந்திடும் ஆகாசராஜனும்
காக்ஷியதைகண்டு களிப்புற்று
வீக்ஷண்யதிக்ஷையாம் விஸ்வரூபமதை
கடாக்ஷித்தருளு மென்றுரைத்தான் 14

கண்டிட்டராஜனும் களிமிகசொண்டு
கலிகாலவாத ரிவரென்று
கொண்டிட்டான்எண்ணமும் பூசைபுரிந்திட
கோபாலருடனே யில்லம்சென்றான் 15

இல்லத்தில்இன்பமாய் இருந்திடும்போது
இருஷிகேசனு மிதுசமயமென்று
நல்லத்தனமுடன் நங்கைபத்மாவதியை
நன்மையாய்மணப்பே னென்றெழுந்தார் 16

பர்ப்பலமாயங்கள் தானேபுரிந்து
பத்மாவதியை தான்மணந்து
கர்ப்பகதருவாம் லக்குமிதேவியை
கருத்தில்நினைத்து வாடலுற்றார் 17

வாடியமுகத்தை கண்டிட்டவானவர்
வண்ணமாய் கொல்லாபுரமடைந்து
நாடியேவந்ததை நாரணிக்குரைத்து
நான்முகனும்தொழ அழைத்துவந்தார் 18

அன்னையாம்லக்குமி தானும்வந்தாளென்று
அப்பனும் வேங்கடத்தான்மகிழ்ந்து
தன்னகத்திருக்க திருவுளம்செய்ய
தானவர்வானவர் தான்மகிழ்ந்தார் 19

மகிழ்வுடன்மங்கள மெங்குமேபொங்கிட
மைந்தன்கணபதி மனங்குளிர
திகழுடன் திருவேங்கடத்தான்சரிதம்
தமிழாலுரைத்தேன் தாணியோரே.

## திருப்பதி யாத்திரை பாட்டும்,

திருவேங்கட கும்மியும்

முற்றிற்று.

சுபம்.

